# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure) .....

IN THE COURT OF IV ADDITIONAL SESSIONS JUDGE

Calendar ..
Miscellaneous ..

S.C. No.111/2022

Preliminary Register ..
Sessions ..

Deposition of witness for Prosecution/ PW1
Defence
Court

Name .. Dineshraj
Father Name .. Ramachandran
Village ..
Taluk ..
Caste ..
Calling ..
Religion ..
Age ..

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of November, 2022

**முதல் விசாரணை-**

நான் எண்.39/18, பள்ளி தெரு, விருகம்பாக்கம், சென்னை 98 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் பி.காம் படித்துள்ளேன். நான் சம்பவ சமயத்தில் மாநகராட்சியில் பணிபுரிந்து வந்தேன். தற்பொழுது ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறனே். சாட்சிகள் விக்கி, பத்ரீ மற்றும் அறிவரசன் எனது நண்பர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.17.06.2021ம் தேதி மதியம் 2 மணியளவில் 100 அடி ரோட்டில் உள்ள சி.என். என்ற கெஸ்ட் உறவுஸில் ரூம் எடுத்து தங்கி இருந்தோம். நான், விக்கி, அறிவு, பத்ரீ ஆகியோர் தங்கி இருந்தோம். பக்கத்து ரூமில் இஞ்ஞாசி மோசஸ், தமிழ் இசக்கி மற்றும் இன்னும் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்களது முகம் தற்பொழுது ஞாபகம் இல்லை.

அவர்களுக்கும், எங்களுக்கும் பேச்சுவாக்கில் சண்டை வந்துவிட்டது. அதனால் பிரச்சனை ஆகிவிடும் என்பதால் நாங்கள் அறையை காலி செய்துவிட்டோம். நாங்கள் வெளியே வந்தபோது சிறிது தூரத்தில் கோல்டன் கெஸ்ட் உறவுஸ் என்ற ஒன்று உள்ளது. அந்த வாசலில் நிறைய நபர்கள் இருந்தார்கள். 1 மற்றும் 2ம் எதிரிகள் இருந்தார்கள். மற்ற எதிரிகள் இருந்தார்களா என்று ஞாபகம் இல்லை. அவர்கள் எங்களை அடிக்க ஆரம்பித்தார்கள். எனது நண்பன் விக்கியை கீழே தள்ளி 3 முதல் 4 நபர்கள் அடித்தார்கள். 1ம் எதிரி எனது நண்பன் பத்ரீஸை போட்டு அடித்து கொண்டு இருந்தார். 1ம் எதிரி அடித்ததில் பத்ரீ கீழே விழுந்துவிட்டான். 1ம் எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து பத்ரீின் தலையில் அடித்தான். அடித்தவுடன் பத்ரீின் தலையில் இருந்து இரத்தம் வந்து கீழே விழுந்துவிட்டான். அனைவரும் ஓடிவிட்டார்கள். விக்கியை நான் மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு போனேன். அங்கு போனபிறகு பத்ரீ இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். விக்கி பத்ரீின் அம்மாவிற்கு போன் செய்து பத்ரீ இறந்த விவரத்தை கூறினான். நானும், என் நண்பன் நித்தீம் காவல் நிலையத்தில் கே.8 அரும்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் பத்ரீஸை தாக்கிய கல்லாகும். அது சா.பொ.ஆ.1 ஆகும். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

சம்பவம் நடந்த இடம் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். நானும் மற்றும் எனது மற்ற மூன்று நண்பர்களும் அறை எடுத்து தங்கி இருந்தோம் என்றால் சரிதான். அறை எடுத்து தங்கியதற்கான ஆதாரம் போலீஸாரிடம் கொடுத்தேன். வாடகைக்கு ரூம் எடுத்தால் ரசீது கொடுப்பார்கள் என்றால் சரிதான். கொரனோ தடுப்பு பாதுகாப்பு பிரிவில் என்னை யார் நியமித்தார்கள் என்றால் அந்த பகுதியை சேர்ந்த உதவி

பொறியாளர் ஆவார். அது 133வது டிவிஷன் ஆகும். எத்தனையாவது மண்டலம் என்று தெரியாது. நான் கொரனோ தடுப்பு பிரிவில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த அன்று நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் 3 முறை காவல் நிலையத்திற்கு போனேன். நான் முதல் முறையாக போனபோது சார்பு ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். என்னை ஒரு பெண் ஆய்வாளர் விசாரித்தார். சுமார் இரவு 7 மணி முதல் 8 மணிக்குள் விசாரித்தார். என்னை விசாரித்த பிறகு தான் போலீஸார் சம்பவ இடத்திற்கு போனார்களா என்றால் அது எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் இருந்து எனது நண்பன் விக்கியை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு போனேன். மருத்துவமனையில் பத்ரீ இறந்த விவரம் தெரிந்த பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரை நான் எழுதவில்லை. என்னுடன் என்னுடைய நண்பர் நித்தீ குமார் வந்தார். என் நண்பர் நித்தீ குமார் புகாரை எழுதினார். நான் கையெழுத்து போட்டேன். நித்தீ குமாருக்கு நான் சொல்லி தான் சம்பவம் தெரியும். என்னிடம் புகார் வாங்கிய சார்பு ஆய்வாளரின் பெயர் தெரியாது. நான் புகாரை கொடுத்த பிறகு தான் சம்பவம் பற்றி சார்பு ஆய்வாளருக்கு தெரிய வந்ததா என்றால் அப்படி தான் இருக்க வேண்டும். நான் புகாரை கொடுக்கும்போது நான், நித்தீ, சார்பு ஆய்வாளர் மற்றும் ஒரு காவலர் ஆகியோர் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 3 கி.மீ தொலைவு இருக்கும். நான் புகார் கொடுத்தவுடன் போலீஸார் முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்துவிட்டார்கள். முதல் தகவல் அறிக்கையில் என்னுடைய கையெழுத்தை அடையாளம் காட்ட முடியுமா என்றால் முதல் தகவல் அறிக்கையில் என்னுடைய கையெழுத்து இல்லை. புகாரில் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டேனா என்றால் ஞாபகம் இல்லை. புகாரிலும், போலீஸாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் எதிரிகளின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சமயத்தில் எதிரிகளின் பெயர்

எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் எழுதப்பட்டுள்ள விவரங்களை போலீஸார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையின் நகல் என்னிடம் கொடுக்கப்படவில்லை. சம்பவ இடத்திற்கு எந்த போலீஸார் போனார்கள் என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. நான் புகாரை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீஸார் புகாரை தயாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கி வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் வீடு விருகம்பாக்கத்தில் உள்ளது. கோயம்பேட்டில் ரூம் எடுத்து தங்க வேண்டிய அவசியம் என்ன என்றால் பத்ரீின் அக்காவிற்கு திருமணம் நடக்க இருந்தது. அதற்கு பார்ட்டி கொடுப்பதற்காக ரூம் போட்டோம். 27.05.2021 முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் தேசிய பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது என்றால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இ பதிவு மூலமாக தனியார் விடுதிகளில் அறை எடுக்க வேண்டும் என்ற விதியின் படி இ பதிவு செய்து அறை எடுத்தோமா என்றால் அவ்வாறு செய்யவில்லை. நாங்கள் சட்டத்திற்கு புறம்பாக அறை எடுத்து மது அருந்திவிட்டு எங்களுக்குள் சண்டை ஏற்பட்டு நாங்கள் பத்ரிஷை கல்லால் அடித்து கொலை செய்துவிட்டு எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் த்ரீ ஸ்டார் லாட்ஜில் தங்கி இருந்தோம். முதல் விசாரணையில் சி.என்.லாட்ஜ் என்று தவறாக சொல்லிவிட்டேன். எதிரிகள் நாங்கள் தங்கி இருந்த அறைக்கு பக்கத்து அறையில் தங்கி இருந்தார்கள் என்று கூறுவதற்கு சாட்சியம் ஏதும் இல்லை. சண்டை நடந்ததால் தான் லாட்ஜ் உரிமையாளர் எங்களை அறையை காலி செய்ய சொன்னார். நாங்கள் அறையை காலி செய்தபோது லாட்ஜ் உரிமையாளர் ரசீது கொடுக்கவில்லை. 17.06.2021ம் தேதி எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்று எனக்கு சரியாக நினைவு இல்லை. சம்பவம் நடந்த இடம் 100 அடி ரோட்டை ஒட்டியவாறே உள்ளது. சம்பவம் நடந்த இடம் மண் சாலை அல்ல. சம்பவம் நடந்த சாலை சீராக இல்லாமல்

சற்று மேடும் பள்ளமாகவும் இருந்தது. ரோட்டுக்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 10 அடி தூரம் இருக்கும். 100அடி ரோடுக்கும், கெஸ்ட் உறவுஸ்க்கும் இடையே பிளாட்பாரம் இருந்ததை நான் கவனிக்கவில்லை. கெஸ்ட் உறவுஸ்க்கு வடக்கே என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. அது போன்று தென்புறம் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்தின் அருகே கட்டிடம் எதுவும் கட்டப்பட்டதா என்று நான் கவனிக்க வில்லை. நான் சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய இரு சக்கர வாகனமான MT 150 ல் மருத்துவமனைக்கு போனோம். விக்கியை மருத்துவமனையில் அவரது தாயாரும், சகோதரரும் பாாத்து கொண்டார்கள். மேற்படி விஷயங்களை போலீஸார் என்னிடம் விசாாரித்தார்கள். போலீஸார் என்னை விசாரித்தபோது இரவு மணி 10.30 இருக்குமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு 17,18,24 ஆகிய மூன்று தினங்களுக்கு காவல் நிலையத்திற்கு போனேன். 17.06.2021 அன்று நான் சம்பவத்தை பார்ககவில்லை என்றாலும், நான் கொரனோ தடுப்பு பிரிவில் பணிபுகிய வில்லை என்றாலும், மாலையில் நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் 1ம் எதிரி இறந்துபோன பத்ரிஷை கல்லால் அடிக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் பத்ரிஷை அடித்து கொலை செய்துவிட்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

பத்ரீஷ் அவருடைய சகோதரியின் திருமணத்திற்காக புரசைவாக்கத்தில் இருந்து வந்து சம்பவத்திற்கு 3 நாட்களுக்கு முன்பே அங்கு அறை எடுத்து தங்கியிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 17.06.2021ம் தேதி மதியம் சுமார் 1 முதல் 2 மணியளவில் ரூம் போட்டோம். நண்பர்கள் நாங்கள் 4 பேர் மட்டும் தான் ரூம் போட்டோம்.

நாங்கள் ரூமிற்கு போவதற்கு முன்பாகவே எங்களை சேர்ந்தவர்கள் அங்கு ரூம் போட்டு தங்கி இருந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. பத்ரிஷ ஏற்கனவே அங்கு ரூம் போட்டு தங்கி இருந்த விவரத்தை என்னிடம் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை. நான் விருகம்பாக்கத்தில் குடியிருந்தேன். விக்கியும், அறிவரசனும் தூளைமேட்டில் குடியிருந்தார்கள். நாங்கள் தங்கி இருந்த லாட்ஜில் ஒவ்வொரு தளத்திலும் சி.சி.டி.வி கேமரா இருந்தது என்றால் சரிதான். ரூமில் நாங்கள் 4 பேர் மட்டும் தான் மது அருந்தினோம். சம்பவம் நடந்த அன்று மதியம் சுமார் 4 மணியளவில் 2 இரண்டு இரு சக்கர வாகனங்களில் 4 நபர்கள் வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் புகார் கொடுத்தவுடன் போலீஸார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் என்ன சொன்னேனோ அதை தான் போலீஸாரிடமும் சொன்னேன்.நாங்கள் தங்கி இருந்த ரூமிற்கு பக்கத்து ரூமில் தங்கி இருந்தவர்கள் தகராறு செய்த சம்பவத்தை லாட்ஜ் உரிமையாளரிடமோ அல்லது காவல் நிலையத்திலோ புகார் கொடுக்கவில்லை. பத்ரிஷ மருத்துவமனைக்கு நான் ஏன் அழைத்து செல்லவில்லை என்றால் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார்கள். காவல் நிலையம் வழியாக மருத்துவமனைக்கு போகும்போது ஏன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் விக்கி காயம்பட்டிருந்ததால் அவரை மருத்துவமனைக்கு முதலில் அழைத்து செல்லலாம் என்று முடிவு செய்து காவல் நிலையத்திற்கு போகவில்லை. நான் தூளைமேடு வழியாக எம்.எம்.டி.ஏ சென்று கே.எம்.சி மருத்துவமனைக்கு சென்றேன். விக்கிக்கு மருத்துவ உதவி அளிக்க வேண்டும் என்று முடிவு செய்த பட்சத்தில் போகும் வழியில் இருந்த தனியார் மருத்துவமனைகளில் அவருக்கு சிகிச்சை அளித்து இருப்பேன் என்றால் சரியல்ல. ஆம்பிலன்ஸ் வருவதற்கு முன்பாகவே நான் விக்கியை கே.எம்.சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டேன். சம்பவ இடத்தில் இருந்து கே.எம்.சி மருத்துவமனைக்கு 15 நிமிடங்களில் மருத்துவமனைக்கு போய்விடலாம்.

(சாட்சி தாமாக) போக்குவரத்து அதிகமாக இருந்ததாலும் விக்கிக்கு காயம் அடைந்து இருந்ததாலும் சுமார் அரை மணி நேரத்திற்கு பிறகு சென்று அடைந்தேன். விக்கி மருத்துவமனையில் அனுமதித்து மருத்துவர்கள் பரிசோதித்து கொண்டிருந்த போது விக்கியின் தாயாரும், அவருடைய சகோதரரும் வந்தார்கள். மருத்துவரிடம் தனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை விக்கி தான் சொன்னான். மருத்துவமனையில் இருந்து சுமார் அரை மணி நேரத்தில் புறப்பட்டு காவல் நிலையத்திற்கு போனேன். புகாரை காவல் நிலையத்தில் வைத்து நித்திஷ் குமார் எழுதினார். நான் சொன்னதை தான் நித்திஷ் குமார் எழுதினான். நான் படித்து பார்த்தேன். நான் சொன்னது போன்று தான் இருந்தது. அறையில் தங்கி இருந்தபோது பக்கத்து அறையில் இருந்தவர்கள் கதவை தட்டினார்கள் என்றோ அதனால் வாக்குவாதம் ஏற்பட்டது என்றோ அதன் பிறகு மாலை 6 மணிக்கு அறையை காலி செய்துவிட்டு வந்தோம் என்றோ புகாரில் சொல்லவில்லை. பக்கத்து அறையில் எத்தனை நபர்கள் தங்கி இருந்தார்கள் அவர்களில் யார் யாரை அடித்தார்கள், அவர்களது பெயர், அங்க அடையாளம் எதுவும் நான் புகாரில் கூறவில்லை. லாட்ஜ் ரூம் பாய் சமாதானப்படுத்த வந்தபோது அவரை யார் பீர் பாட்டிலால் அறுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொல்லும் அறையில் 3 நாடகளாக தங்கி இருந்து மது அருந்தி பக்கத்தில் அறையில் தங்கியிருந்த நபர்களை தொந்தரவு செய்தார்கள் என்றாலும் அறையை காலி செய்யாமல் தகராறு செய்தார்கள் என்றாலும் அது எனக்கு தெரியாது. நாங்கள் தான் அறையில் தங்கி இருந்து தொடர்நது மது அருந்தி குடிபோதையில் இருந்தோம் என்றாலும்நாங்கள் போன் செய்து தான் மற்ற நபர்கள் வந்து பக்கத்து அறையில் இருந்த நபர்களிடம் தகராறு செய்தார்கள் என்றால் சரியல்ல. எங்களுடன் மேலும் சில நபர்கள் அறையில் வந்து தங்கி மது அருந்தி எங்களுக்குள் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. மது வாங்குவதற்காகவும், நண்பர்களை அழைத்து வருவதற்காகவும் வெளியே சென்று இருந்தேன்

என்றால் சரியல்ல. நான் அ.சா.2 விக்கியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் இறந்த நபர் என் நண்பர் என்பதால் அங்கு நடந்த உண்மை நிகழ்வுகளை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன பெயர்கள் எனக்கு தெரியாது. போலீஸார் சொல்லி தான் எனக்கு தெரியும்.

**3,6,7 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை** = இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt.17.11.2022. IV Addl. Sessions Judge

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure) .....

IN THE COURT OF IV ADDITIONAL SESSIONS JUDGE

Calendar ..

Miscellaneous ..

S.C. No.111/2022

Preliminary Register ..

Sessions ..

Deposition of witness for Prosecution/ PW2
Defence
Court

Name .. Vikki

Father Name .. Sivakumar

Village ..

Taluk ..

Caste ..

Calling ..

Religion ..

Age ..

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of November, 2022

**<u>முதல் விசாரணை</u>-**

நான் எண்.5, கீதம் அப்பார்மெண்ட், கோசமணி தெரு, பத்மநாத நகர், தூளைமேடு, சென்னை 94 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் பி.எஸ்.ஸி விஷ்காம் படித்துள்ளேன். ஆவடியில் படித்தேன். என் கூட பிறந்தவர்கள் தமிழ் செல்வன் மற்றும் விஜய் ஆவார். சாட்சிகள் தினேஷ்ராஜ், பத்ரீ, அறிவரசன் ஆகியோரை எனக்கு தெரியும் அவர்கள் எனது நண்பர்கள். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி (இஞ்ஞாசி மோசஸ்), 5ம் எதிரி (ஆரோக்கிய ரூபன்), 2ம் எதிரி (தமிழ் இசக்கி), 7 எதிரி (ரஞ்சித்குமார்) ஆகியோரை தெரியும். மற்றவர்களை ஞாபகம் இல்லை. 17.06.2021ம் தேதி மதியம் 2 மணிக்கு 100 அடி ரோட்டில் உள்ள த்ரீ ஸ்டார் கெஸ்ட் உறவுஸ்ஸில் ரூம்

எடுத்து நான் திஷேராஜ், அறிவரசன், பத்ரீ ஆகியோர் தங்கி இருந்தோம். நாங்கள் மது அருந்தினோம். அப்பொழுது கதவை தட்டினார்கள். யார் தட்டினார்கள் என்று ஞாபகம் இல்லை. பத்ரீ கதவை திறந்தான். கதவை தட்டியவர்களுக்கும், பத்ரீக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. நாங்கள் அறைக்குள் வந்துவிட்டோம். தட்டிய நபர்களும் போய்விட்டார்கள். பிரச்சனை ஆகிவிட்டது என்று நாங்கள் அறையை காலி செய்துவிட்டு மாலை சுமார் 6 மணியளவில் கிளம்பினோம். கோல்டன் கெஸ்ட் உறவுஸ் அருகே நாங்கள் வந்து கொண்டிருந்தபோது அங்கு நிறைய பேர் இருந்தார்கள். எதிரி ஆரோக்கிய ரூபன் என்னை அடிக்க ஓடி வந்தபோது என் மீது விழுந்துவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். 4 முதல் 5 நபர்கள் சேர்ந்து என்னை அடித்தார்கள். பத்ரீஷயும் அவர்கள் அடித்தார்கள். எதிரி இஞ்ஞாசி மோசஸ் ஒரு கல்லை எடுத்து பத்ரீஷ ஓங்கி அடித்தான். எனக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. அதனால் திஷேராஜ் என்னை மருத்துவமனைக்கு கூட்டிக்கொண்டு போனான். மருத்துவமனைக்கு போனபிறகு தான் பத்ரீ இறந்தவிவரம் எனக்கு தெரியவந்தது. இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மருத்துவமனையில் இருந்து நான் தான் பத்ரீின் தாயாருக்கு தகவல் சொன்னேன். இது சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள். பத்ரீஷ அடித்த கல்லை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் உறாலோ பிளாக் கல்லால் தான் அடித்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் அடித்தாரா என்று தற்பொழுது கூறமுடியாது. ஆனால் அந்த கல்லை போன்று தான் இருந்தது.

**2 மற்றும் 5ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

சம்பவத்தன்று போலீஸாரிடம் நான் கூறிய சங்கதிகளை

அவர்கள் எழுதி கொண்டார்கள். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலீஸாரிடமும் சொன்னேன். இறந்துபோன பத்ரீ எனக்கு நேரடியாக நண்பர். இராயப்பேட்டையில் வசிக்கும் பத்ரீ எனக்கு எப்படி நண்பர் ஆனார் என்றால் என் வீட்ருகே வருவார். அந்த வகையில் நண்பர் ஆவார். நான் கே.எம்.சி மருத்துவமனையில் ஒரு நாள் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். சம்பவத்தன்று போலீஸார் என்னை மருத்துவமனையில் வைத்து தான் விசாரித்தார்கள். போலீஸார் என்னை விசாரிக்கும்போது என் தாயாரும், அண்ணனும் உடன் இருந்தார்கள். அவர்களுக்கு சம்பவத்தை அதற்கு முன்பாக போன் மூலமாக சொன்னேன். மருத்துவரிடம் என்ன நடந்தது என்று என் நண்பன் தான் கூறினான். என் நண்பன் பெயர் விமல். என் நண்பர் விமலுக்கு நான் சொன்ன பிறகு தான் சம்பவ விவரம் தெரியும். அந்த விவரத்தை தான் அவர் மருத்துவரிடம் சொன்னார். அப்பொழுது நான் அருகில் இருந்தேன். போலீஸார் விசாரணையில் நான் தங்கி இருந்த அறையை யார் பெயரில் பதிவு செய்யப்பட்டது என்று நான் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ சமயத்தில் நாங்கள் தங்கி இருந்த அறைக்கு பக்கத்து அறையில் எத்தனை நபர்கள் தங்கி இருந்தார்கள் என்று நான் போலீஸாரிடம் சொன்னேன். நாங்கள் அறையில் தங்கி இருந்தபோது கதவு தட்டப்பட்டது என்றும் பத்ரீ கதவை திறந்தபோது கதவை தட்டிய நபருக்கும், பத்ரீக்கும் தகராறு நடந்த விவரத்தை போலீஸார் விசாரித்த போது சொன்னேன். தகராறு நடந்தவுடன் பிரச்சனை ஆகி விடும் என்பதால் அறையை காலி செய்துவிட்டு நாங்கள் புறப்பட்டோம் என்று போலீஸாரிடம் சொன்னேனா என்று ஞாபகம் இல்லை. நாங்கள் கோல்டன் கெஸட் உறவுஸ் அருகே வந்து

கொண்டிருந்தபோது அங்கு நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றும் எதிரி ஆரோக்கிய ரூபன் என்னை அடிக்க வந்தபோது தடுக்கி என்மீது விழுந்துவிட்டார் என்றும் அப்பொழுது நான் கீழே விழுந்து விட்டேன் என்றும் என்னை 4 முதல் 5 நபர்கள் என்னை அடித்தார்கள் என்றும் போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது என்றும் என்னை அ.சா.1 மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும் நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து அருகில் இருந்த நபர்கள் உதவியுடன் கே.எம்.சி மருத்துவமனைக்கு நானும், பத்கீம் போனோம் என்று சொன்னால் அது தவறு. நான் குறுக்குவிசாரணையில் பதிலளிக்கையில் சொன்னதாகவும், சில சங்கதிகள் ஞாபகம் இல்லை என்று கூறியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் சொல்லாத சங்கதிகளை மிகைப்படுத்தி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாங்களும், நான் சொல்லாத வேறு சில நண்பர்களும் அறையில் தங்கி இருந்த நபர்களிடம் மது அருந்திவிட்டு தகராறு செய்தோம் என்றால் சரியல்ல.நாங்கள் தங்கியிருந்த அறையின் ரூம் பாயை மது போதையில் பீர் பாட்டிலால் அறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நானும், என் நண்பர்களும் மது அருந்திவிட்டு அக்கம் பக்கம் இருந்தவர்களிடம் தகராறு செய்தபோது மது போதையில் கீழே விழுந்தபோது ஒரு இரும்பில் மோதி இடுப்பில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. உண்மை சம்பவத்தை மறைத்து எதிரிகளால் காயம் ஏற்பட்டது போன்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மது போதையில் நாங்கள் செய்த குற்றத்தை

மறைப்பதற்காக எதிரிகள் மீது குற்றம் கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சம்பவத்திற்கு முன்பு எனக்கு தெரியாது.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சம்பவம் புதன் கிழமை அன்று நடந்தது. 17.06.2021ம் தேதி சம்பவம் நடந்தது. சம்பவத்தன்று லாட்ஜில் திணேஷ்ராஜ் பெயரில் அறை பதிவு செய்யப்பட்டது. பத்ரியின் சகோதரி திருமணம் என்பதால் அதற்கு பார்ட்டி கொடுத்தார். அதற்காக அறை எடுத்து தங்கினோம். நடந்த சம்பவம் எனக்கு தெரியும். சம்பவத்தன்று மட்டும் தான் அறை எடுக்கப்பட்டது. 17.06.2021 அன்று ஊரடங்கு அமலில் இருந்தது எனக்கு தெரியும். அரசாணைப்படி வெளியில் சுற்றி திரியக்கூடாது என்பது எனக்கு தெரியும். அரசாணையை மீறி நாங்கள் அறை எடுத்து தங்கி தகராறு நடந்தது என்றால் சரிதான். த்ரீ ஸ்டார் கெஸ்ட் உறவுஸில் நாங்கள் தங்கி இருந்த அறை எண் எனக்கு தெரியாது. 4 தளங்கள் கொண்ட லாட்ஜ் ஆகும். மது அருந்திவிட்டு எங்களுக்குள் தகராறு நடக்கவில்லை. நாங்கள் தங்கி இருந்த அறை எந்த தளத்தில் இருந்தது என்று ஞாபகம் இல்லை. நாங்கள் தங்கி இருந்த லாட்ஜின் ரூம் பாய் எங்களிடமும் எதிர் தரப்பினரிடமும் சமாதானம் பேசினார். ரூம் வாசலில் வைத்து பேசினார். த்ரீ ஸ்டார் கெஸ்ட் உறவுஸ்க்கும், 100 அடி ரோட்டுக்கும் இடையே சுமார் 10 மீட்டர் தொலைவு இருக்கும். த்ரீ ஸ்டார் கெஸ்ட் உறவுஸ்க்கு வட புறத்திலும், தென் புறத்திலும் சி.என். லாட்ஜும், கோல்டன் கெஸ்ட் உறவுஸ் உள்ளது. சம்பவ சமயத்தில் எதிரிகள் தான் எங்களை அடித்தார்கள். சம்பவத்தை பொது மக்கள் பார்த்தார்கள். சம்பவத்தின் போது எதிரிகள் எங்களை அடித்ததை என் நண்பர்களும் பார்த்தார்கள். சுமார் 20 நபர்கள் சம்பவ சமயத்தில்

இருந்தார்கள். அவர்கள் வேடிக்கை தான் பார்த்தார்கள் விலக்கிவிடவில்லை. சம்பவ சமயத்தில் போக்குவரத்து இருந்தது. சம்பவ இடம் அருகே அரும்பாக்கம் பேருந்து நிறுத்தம் இருந்தது. 1ம் எதிரியை சம்பவத்திற்கு முன்பாக எனக்கு தெரியாது. போலீஸார் விசாரணையின் போது சொன்ன பிறகு தான் அவர் பெயர் எனக்கு தெரிய வந்தது. போலீஸார் என்னை முதலில் கே.எம்.சி மருத்துவமனையிலும் அதன்பிறகு தனியார் மருத்துவமனையிலும் வந்து விசாரித்தார்கள். போலீஸார் சொல்லி தான் எனக்கு 1ம் எதிரி பெயர் தெரிய வந்தது. சம்பவம் நடந்த சாலையானது ரோடு போடாத நிலையில் இருந்த மண் ரோடு ஆகும். 17.06.2021 அன்று ஊரடங்கு காரணமாக யாரும் வெளியே செல்லக்கூடாது என்று உத்தரவு இருந்தபோதும் நாங்கள் வெளியே சென்றோம் என்றால் இரவு 10 மணிக்கு மேல் தான் ஊரடங்கு ஆகும். அன்றைய தேதியில் சம்பவம் நடந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3 மற்றும் 6ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** = இல்லை.

**<u>7ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ சமயத்தில் நான் மது போதையில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஆம்புலன்ஸ் அங்கு வந்தபோது போலீஸாரும் அங்கு வந்தார்கள் என்றால் தவறு. என் மீது வேறு குற்ற வழக்குகள் இருக்கிறது என்று சொன்னால் அது தவறு.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt.17.11.2022. IV Addl. Sessions Judge

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure) .....
IN THE COURT OF IV ADDITIONAL SESSIONS JUDGE

Calendar ..
Miscellaneous ..

S.C. No.111/2022

Preliminary Register ..
Sessions ..

Deposition of witness for Prosecution/ PW3
Defence
Court

Name .. Arivarasan
Father Name ..Ayyanar
Village ..
Taluk ..
Caste ..
Calling ..
Religion ..
Age ..

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of November, 2022

<u>முதல் விசாரணை</u>-

நான் எண்.6/37, லோகநாதன் நகர், 1வது தெரு, தூளைமேடு, சென்னை 106 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் சாப்ட்வேர் இன்ஜினியராக ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். என் அம்மா வீட்டு பெண்மணி. என் கூட பிறந்த இளைய சகோதரி இருக்கிறார். அவர் பள்ளியில் படிக்கிறார். சாட்சிகள் தினேஷ்ராஜ், விக்கி மற்றும் பத்ரீ ஆகியோர் என் நண்பர்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஞாபகம் இல்லை. 17.06.2021ம் தேதி திரீ ஸ்டார் கெஸ்ட் உறவுஸில் அறை எண் 301ல் நண்பர்கள் நாங்கள் நால்வரும் தங்கி இருந்தோம். பக்கத்து ரூமில் இருந்த நபர்களுடன் பிரச்சனை ஏற்பட்டது. என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது.

விக்கியும், பத்நீம் போய் கேட்டார்கள். நாங்கள் பிரச்சனை வரக்கூடாது என்பதால் அறையை காலி செய்துவிட்டோம். அதே சாலையில் கோல்டன் கெஸ்ட் உறவுஸ் அருகே வந்தபோது கூட்டமாக வந்தவர்கள் எங்களை அடித்தார்கள். பேசிக்கொண்டிருக்கும்போதே அடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு பாட்டிலால் யாரோ என் தலையில் அடித்தார்கள். யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. தலையில் ஒரு கீறல் மட்டும் இருந்தது. நான் எழுந்து வீட்டுக்கு போய்விட்டேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

(**கற்றுணர்ந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதும்படியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும்படியும் கேட்டுகொண்டார். அவரது வேண்டுகோள் ஏற்கப்பட்டு சாட்சி பிறழ் கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது**)

**<u>அரசுதரப்பு குறுக்கு விசாரணை-</u>**

போலீஸார் என்னை விசாரிக்கும்போது என்னையும், பத்ரீஷையும் , விக்கியையும் கையாலும், காலாலும் அடித்தார்கள் என்று கூறியுள்ளேன் அது உண்மைதான். அப்பொழுது பத்நீ அடிதாங்க முடியாமல் கீழே விழுந்த போது லாவண்டர் கலர் சட்டையும், லுங்கியும் கட்டியிருந்த ஒருவன் உறலோ ப்ளாக் கல்லை எடுத்து பத்நீன் தலையில் போட்டான் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. தலையில் அடிபட்டுவிட்டது என்று தான் சொன்னேன். போலீஸ் விசாரணையில் நடந்த சம்பவங்களை சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>** இல்லை

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt.17.11.2022. IV Addl. Sessions Judge